விலை சதம் 50 ★ பக்கங்கள் — 8

சகல பல் வியாதிகளையும் போக்கவல்லது

அண்ணா பற்பொடி

பாவித்து வெற்றுப் பைக்கட்டுகள் 15 அனுப்பி இலவச பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா தொழிற்சாலை இணுவில்.

தொலைபேசி: 7412.

ஈழநாடு

வார மலர்

THE EELANAADU VAARAMALAR

நீம் வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட

நீம் வாசனை சோப்பை

வாங்கி உபயோகியுங்கள்.

உங்கள் சருமத்தின் பாதுகாப்பிற்கு மிகவும் சிறந்தது.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

மலர் 10 | ஆனி 18 | ஜூலை 25 | ஞாயிற்றுக்கிழமை | [2—7—78] | இதழ் 141

# உள்ளூராட்சிமன்றத்தேர்தலில் தமிழர்கூட்டணி தீவிர கவனம்

## தமிழ்ப்பகுதி அபிவிருத்தியே முக்கிய நோக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்தியை உத்தேசித்து அடுத்துவரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தீவிரக்கவனம் செலுத்த வேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்பும் கடமையுமாகுமென்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடம் கருதுகின்றது.

மாவட்ட மந்திரிகள் நியமிக்கப்படும் போது மாவட்ட அபிவிருத்திச்சபையும் ஆலோசனைச் சபையும் நியமிக்கப்படவுள்ளன. இந்தச்சபையில் அந்தந்த மாவட்ட தொகுதி எம். பி.க்களும், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் அங்கம் வகிக்க இருக்கின்றனர்.

இதனால் மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதென்றும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழ்ப் பகுதிகளை அபிவிருத்திசெய்து தமது லட்சியத்தை ஈடேற்றலாமென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் கருதுகின்றது.

மட்டக்களப்பில் இன்னும் பேரவை உறுப்பினர் இலங்கை மத்தியில் இருபற்றி கூட்டணித் தலைவர்கள் மிகத் விளக்கமாக எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது. [ஈ-இ]

விவசாயக் கடன்களைத்

## திருப்பிக் கொடுக்காவிடின் மீண்டும் கடன்கிடையாது

[கொழும்பு]

வங்கிகளில் விவசாயக்கடன் எடுத்து இதுவரை அதைத் திருப்பிக்கொடுக்காதவர்களுக்கு மீண்டும் கடன் வழங்குவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

பந்தநல்லூரின் விசேஷ நாதஸ்வரக் கச்சேரி

கல்வியங்காடு மூக்குறுணி பிள்ளையார் கோவிலில்

தென் இந்திய நாதஸ்வரமேதை

பந்தநல்லூர்ரி. ஆர். தெட்சணாமூர்த்தி அவர்களின்

விசேஷ நாதஸ்வர இசைக்கச்சேரி நடைபெறும்.

நாச்சிமார் கோயில் கே. கணேசபிள்ளை [தவில்]

காலம்: 2-7-78 இன்று மாலை 7-00 மணி

குறிப்பு: நிகழ்ச்சியின்போது நாதஸ்வரம் கலைஞரைக் கௌரவித்து தங்கப்பதக்கம் வழங்கப்படும்.

9724

## சரண்சிங், ராஜ் நாராயன் ராஜினாமா: ஜனாதிபதி ஏற்றார்

### பிரதமருக்கு மேலும் அமைச்சர்கள்

புதுடில்லி, ஜூலை 1

இந்திய மத்திய அமைச்சரவையில் இருந்து வெளியேறிய உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங், சுகாதார அமைச்சர் திரு. ராஜ்நாராயன் ஆகியோரின் ராஜினாமாவை இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி இன்று ஏற்றுக் கொண்டார்.

ராஜினாமாச் செய்த அமைச்சர்களின் அமைச்சுப் பொறுப்பை பிரதமர் மொரார்ஜி தேசாய் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்று திரு. தேசாய் இப்பொறுப்புக்களை ஏற்றுள்ளார்.

இதேவேளையில் ஜனதாக் கட்சியின் இன்றைய நிலை பற்றி ஆராய எதிர்வரும் இரண்டாந் திகதி புதுடில்லியில் ஜனதாக் கட்சியின் ஆட்சிக்குழு கூடுகிறது. [இ]

## லண்டனில் நடந்த நாட்டிய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

செல்வி கிரிஜா சண்முகசுந்தரத்தின் நாட்டிய நிகழ்ச்சி நேற்று சனிக்கிழமை லண்டனில் நடைபெற்றது.

இவர் யாழ். செயலகத்தைச் சேர்ந்த தொடர்பு அதிகாரி சண்முகசுந்தரத்தின் புதல்வி. 'வழுவூர் இராமையர் பரம்பரையில் வந்த திருமதி திரிபுர சுந்தரியின் சிஷ்யையாவார். இவரது நிகழ்ச்சி லண்டனிலுள்ள முருகன் கோவில் கட்டிட நிதிக்காக நடைபெற்றது. இவரை பி.பி.ஸி. தமிழோசைப் பகுதியினர் பேட்டிகண்ட நிகழ்ச்சி கடந்த கிழமை தமிழோசையில் ஒலிபரப்பானது. [ச]

## செப்டம்பரில் 8 ஸ்ரீ

[கொழும்பு]

[illegible] செப்டம்பர் மாதத்திலிருந்து 8 ஸ்ரீ இலக்கங்கள் வழங்கப்படவுள்ளதாக, வாகனப்பதிவு இலாகா இரேஷ்ட அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

பெருந்தொகையான வாகனங்கள் பதிவுக்காக விண்ணப்பித்திருப்பதால், செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் 7 ஸ்ரீ இலக்கங்கள் முடிவடைந்து விடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை இந்த ஆண்டில் இலங்கையில் அதிக வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். [தெ-இ]

## சண்முகதாசன் தலைமையை நிராகரிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

திரு. என். சண்முகதாசனின் தலைமையை நிராகரிக்கும்படி சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களான திரு வாசர்கள் சமரசிங்க செல்வாவும் கே. ஏ. சுப்பிரமணியமும் மேற்படி கட்சியின் உறுப்பினர்களுக்குக்கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

மக்கள் சீனாவின் மூன்று உலக கோட்பாட்டைக் கண்டித்தும், அல்பேனியாவின் நிலையை ஆதரித்தும் திரு. சண்முகதாசன் அண்மையில் ஓர் அறிக்கையை வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

திரு சண்முகதாசனின் தலைமையை எதிர் புரட்சிகரமாக சீர்குலைவுத் தன்மை என்றும் அவரது பதினாறுக்கு வருடகால தலைமையில் வெகுஜனங்களுக்கு தலைமை தாங்கக்கூடிய ஒரு சக்திமிக்க இயக்கமாக கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி எழுப்பத் தவறிவிட்டது என்றும் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப் பிரச்சினையை மார்க்சிசம்-லெனினிசம்-மா சேதுங் சிந்தனையின் அடிப்படையில் அணுகுவதற்குப் பதிலாக புத்தகப் பூச்சியாக ஒருமுனைவாத நிலையில் அணுகினார் என்றும் அவர்கள் கண்

(8-ம் பக்கம் பார்க்க)

## கோயிலில் காயங்களுடன் கிடந்தபூசகர் ஆஸ்பத்திரியில்

(வேலணை)

கோயிலுக்கும் பூசை செய்யச்சென்ற பூசகர் ஒருவர் தலையில் பலத்த காயங்களுடன் மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று மண்கும்பானில் இடம்பெற்றுள்ளது.

மண்கும்பான் கறுப்பாச்சி அம்மன் ஆலயத்தின் பூசகர் கணபதிப்பிள்ளை என்பவரே ஆஸ்பத்திரியில் காயங்களுடன் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி 15-ம் இலக்க வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள பூசகருக்கு நேற்று இரவுவரை மயக்கம் தெளியவில்லையாம்.

நேற்று முன்தினம் காலை 4 மணிக்கு வழமையாகக் கோயிலுக்குச் செல்லும் இவர்

(8-ம் பக்கம் பார்க்க)

## இருவர் கைது

[சாவகச்சேரி]

கல்விவட்டித்துறையிலுள்ள கடையொன்றில் திருடப்பட்ட தாகக் கூறப்படும் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள மின்பிடி உபகரணங்களை விற்பதற்காக கொண்டு சென்ற தாக சந்தேகத்தின் பேரில் கைதாகி பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு [illegible] மறியலில் வைக்கப்பட்டனர். [illegible]

ஸ்கூட்டர் விற்பனைக்கு

லம்பரெட்டா — 6 ஸ்ரீ DL மொடல்

தொடர்பு கொள்க:

மூ. புஷ்பராசா,

இணுவில் மேற்கு — இணுவில்

9728

## தபால் முத்திரை சேகரித்தலும் பாதுகாத்தலும்

# முத்திரைகள் பற்றிய செய்திகளை படித்து அறிவதன் அவசியம்

(முன் தொடர்ச்சி)

முத்திரைகளைப் பற்றிய செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளைப்படித்து அறிவது முத்திரை சேகரிப்பவர்களது அறிவைப் பெருக்குவதற்கு வழிசெய்யும். இன்று உலகில் முக்கியமான மொழிகள் எல்லாவற்றிலும் முத்திரை பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவைகளில் அவ்வப்போது பத்திரிகைகளைப்பற்றிய விஷயங்கள், முத்திரை விற்கும் கம்பெனிகளின் விளம்பரங்கள் முத்திரைகள் பெற விரும்புவோர், மாற்ற விரும்புவோர், ஏலம் விடுதல் போன்ற பல செய்திகளை அறியலாம். முத்திரைகளைப்பற்றிய கட்டுரைகள், புதிதாக வெளியிடப்படும் முத்திரைகளின் படங்கள் ஆகியவற்றையும் காணலாம். இவ்விஷயங்கள் முத்திரை சேகரிப்பவர்களுக்கு அமிர்தம் போன்றது.

மேற்கூறிய பொருள்கள் அனைத்தையும் நீங்கள் முத்திரை சேகரிக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து ஒவ்வொன்றாக வைத்துக்கொள்ளவேண்டியது மிகமிக அவசியம். இவைகளை வைத்துக்கொண்டு சேகரிக்கும் போதுதான் முத்திரைகளைச் சேகரிப்பதன் முழுப் பயனையும், இன்பத்தையும் அடையலாம். மேற்கூறிய சாதனங்களுள் முக்கியமானவை ஹின்ஜஸ் என்பதும் முத்திரை எடுக்கும் கருவியும் ஆகும். இவைகள் இரண்டும் இன்றியமையாது இருக்க வேண்டும்.

### முத்திரைகளும் அவற்றில் உள்ள பெயர்களும்

இப்போது உலகின் எல்லா நாடுகளும் முத்திரைகள் வெளிவிடுகின்றன. பல நாடுகள் முத்திரைகளின்மேல் தங்கள் நாட்டின் பெயரைப்போடுவதில்லை. சில நாடுகளின் முத்திரைகளின்மேல் உள்ள பெயர்களும் புரிவதில்லை,

### முக்கியமாக கவனிக்கவேண்டியது எது?

முத்திரைகளை ஆல்பத்தில் ஒட்டுவதற்கு முன் அதன் பக்கங்களை நிரப்பவேண்டும் என்று எண்ணினால் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் முத்திரைகளை அதிகம் ஒட்டிவிடுவீர்கள். ஒட்டிய பிறகு நீங்களே மீண்டும் புரட்டுங்கள் நிச்சயம் அது நன்றாக இருக்காது. காரணம் நீங்கள் முத்திரையின் சுத்தத்தைப் பார்க்கவில்லை. மேலும் செரிந்த முத்திரைகள், பாதி முத்திரைகள் - அரசாங்க சாவின் முத்திரைகள்- சிறிது கிழிந்தவைகள்-சுருங்கிப் போனவைகள்-மடங்கிக் கோடு விழுந்தவைகள் என்று பற்பல விதமான கெட்டுப்போன சேகரிப்புக்குத் தேவையற்ற முத்திரைகளை ஒட்டிவைத்திருப்பீர்கள்.

எனவே மேலே சொன்ன முத்திரைகளை எடுத்துவிட்டு நல்ல தன்மையுள்ள முத்திரை ஒட்டுங்கள். இதில் 20-25 தேறினாலும் போதும். இப்போது அந்தப் பக்கத்தைப் பார்த்தால் மிக நன்றாக இருக்கும். எவ்வளவு விலையுயர்ந்த முத்திரையாக இருந்தாலும் அது மிகுந்த பழுதடைந்திருப்பின் அதை ஆல்பத்தில் சேர்த்திருப்பதே நல்லது - சாதாரணமாக முத்திரைகளின் பின்புறம் பேப்பரோ, அழுக்கோ, பசையோ ஏதுமில்லாமல் பற்கள் ஒன்று தவறாமல் மடங்காமலும் இருக்கவேண்டும்.

பழங்காலத்து முத்திரைகள், விசேஷ காலத்தில் வெளியிடப்பட்ட பிரத்தியேக முத்திரைகள் மிகவும் விலையுயர்ந்த முத்திரைகள், யுத்த காலத்து முத்திரைகள் போன்றவைகளை அதனதன் உறைகளிலேயே அஞ்சலக அச்சிட்ட முத்திரைகளுடன் வைத்திருத்தலே நலம். அப்போதுதான் அதன் விலை மதிப்பு உயரும். இந்த உறைகளைத் தனி ஆல்பங்களில் வைத்துக்கொள்ளலாம்.

### சுத்தமாக்க

சாதாரண முத்திரைகளை வெதுவெதுப்பான நீரில் படம் மேலே இருக்கும்படி போட்டு மிதக்க வைத்தால் பின்புறம் உள்ள சகலமும் தண்ணீரில் விட்டுவிடும். பிறகு அதை ஒரு நீர் உறிஞ்சும் காகிதத்தில் (Blotting paper) போட்டு நிழலோட்டமாக வைக்கவும். எக்காரணத்தைக்கொண்டும் முத்திரைகளை வெயிலில் வைக்கக் கூடாது. பொதுவாக முத்திரைகளை அப்படியே நீரில் அமுக்கிவிடக்கூடாது. ஏனெனில் அசந்தர்ப்பமாக அதன் நிறம் கெட்டு விட நேரிடும்.

தற்காலத்தில் முத்திரைகளைச் சுத்தம்செய்ய எவ்வளவோ நவீன முறைகளைக் கையாளுகின்றனர். சில திரவத்தின் உதவியால் அழுக்குகளை நீக்குகின்றனர். ஒடிந்த பற்களை செப்பனிடுகிறார்கள். சிறிய பழுதுகளை நிவர்த்திசெய்து அதிக லாபம் அடைகிறார்கள்.

இவ்விதமாக முத்திரைகளை ஆல்பத்தில் ஒட்டுமுன் முக்கியமாக கவனிக்கவேண்டியது அதன் தன்மைதான். எக்காரணத்தைக்கொண்டும் கெட்டுப் போன முத்திரைகளை ஆல்பத்தில் வைக்காதீர்கள். விலைக்கு வாங்கும்போதும் கவனமாக இருங்கள்.

எந்தக் காரியம் செய்தாலும் அதில் ஒரு ஒழுங்கு இருக்கவேண்டுமென்பது நாம் அறிந்த விஷயம். பொருள்களிலும் ஒழுங்கில்லாத பொருள்கள் எளிதில் கெட்டு அதன் உண்மை மதிப்பை இழந்து விடுகின்றன. இதை நாம் முத்திரை சேகரிப்பிலும் பின்பற்றவேண்டும். இதனால் முத்திரைகள் பலகாலம் கெடாமல் இருக்கின்றன.

ஒழுங்கு படுத்துவதற்கு முக்கிய உபகரணம் முத்திரை கேட்லாக். இதைப்பற்றி முன்பே கூறியுள்ளேன். கேட்லாக்கிலுள்ள முத்திரையின் எண்படி ஒட்ட ஆரம்பித்தோமானால் நன்றாக இருக்கும். உதாரணமாக 250-251-252-253 என்று ஒட்டி 254 என்ற முத்திரை கிடைக்காததால் அதற்கு இடம் விட்டு ஒட்டி விடுகிறோமென்று வைத்துக்கொள்ளுங்கள். பின்பு நாம் பலபேரிடம் 254 எண்ணுள்ள முத்திரையைத் தேடிப்பிடித்து ஒட்டுவதுதான் உண்மையான பொழுது போக்கு. ஒருவேளை 254 எண்ணுள்ள முத்திரை 10 வருடங்களுக்குப் பிறகு அகப்பட நேரிடலாம். இவ்வாறு எவ்வளவு காலமானாலும் பொறுமையுடன் தேடிப் பிடித்து ஒட்டும்போது ஆங்காங்கு கெட்லாக் நம்பர்களையும் விலைகளையும் குறித்துக்கொள்வது நலம்.

பல நாடுகள் பலவித வடிவங்களில் முத்திரைகளை வெளியிடுகின்றன. அவைகளை அழகாக வைத்து ஒட்டவும். ஒட்டிய பக்கத்தில் முத்திரையின் விசேடத்தைக் குறிக்கும் போது மெல்லிய எழுத்துக்களில் எழுதவேண்டும். ஓவியத்தில் வல்லமை பெற்றவர்கள் அழகாக Y எழுத்துக்கள் போட்டு அழகாக்கலாம். முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால் நீங்கள் செய்யும் எந்த அலங்காரமும் முத்திரையின் தரத்தைக் கெடுக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. கவனம் இருக்கட்டும் முத்திரைகளை ஹின்கஸ் உதவியால்தான் ஒட்டவேண்டும்.

### முத்திரைகளில் ஏற்படும் தவறுதல்களும் அதன் விசேடமும்

உலகில் தினமும் ஒவ்வொரு நாட்டிலும் லட்சக்கணக்கான முத்திரைகள் உபயோகிக்கப் படுகின்றன. உதாரணமாக நாமே இதுவரை எத்தனை முத்திரைகளை ஒட்டியிருப்போம். இம்முத்திரைகளை நாம் வருஷக்கணக்காக உபயோகித்தும் அந்த முத்திரைகளில் ஒரு சிறுபுள்ளியோ- நிறத்தில் ஒரு வித்தியாசமோ நம்மால் காண முடிகிறதா? இருந்தாலும் என்றோ ஒருநாள் ஒரு சிறு அச்சுத்தவறு வந்தும் விடுகிறது. அதைச் சேகரிப்பாளர்கள் ஒரு பெரிய பொக்கிஷமாகக் கருதுகிறார்கள். ஏன்? அவ்விதமிருந்த தவறு கொண்ட முத்திரை அதிகம் கிடைக்காதல்லவா? இம்மாதிரி முத்திரைகளுக்குத்தான் கேட்லாக்குகளிலும் அதிக விலைமதிப்புக்கொடுக்கப்படுகிறது.

தபால் அலுவலகத்தில் புதிய முத்திரைகள் வாங்கும் போதும்- உபயோகிக்கப்பட்ட வேறு முத்திரைகளை பிற சேகரிப்பாளர்களிடமிருந்து பெறும் போதும் நமது கூர்மையான கண்களினால் அம்முத்திரைகளில் ஏது தவறுகளைத் தேடிப்பார்த்தல் நலம். ஏனெனில் அதிர்ஷ்டவசமாக அப்படி ஒரு முத்திரை நமக்குக் கிடைத்துவிட்டால் புதையலைப் போல பெருந்தொகையைப் பெற்று மகிழலாம். இதேபோல பிறரிடமிருந்து தவறுள்ள முத்திரைகளை நாம் விலைகொடுத்து வாங்கும் போதும் மிகவும் அவதானமாயிருத்தல் வேண்டும். ஏனெனில் வேண்டுமென்றே தனது கைத்திறமையினால் சில தவறுகளை ஏற்படுத்தி ஆர்வமுள்ள சேகரிப்பாளரிடம் நிஜத்தவறு என்று கூறி ஏமாற்றிப் பணம் பறிப்போர் பலர் இக்காலத்தில் தோன்றியுள்ளனர்,

சில தவறுகள் அதிக அளவு வெளிவரும்போது அதன் மதிப்பு குறைந்துவிடுகிறது. உதாரணமாக 1951ல் இலங்கை வெளியிட்ட முத்திரையில் இலங்கை என்ற வார்த்தையில் 'இ' என்ற எழுத்துக்கு மேல் புள்ளியில்லை. பின்பு புள்ளியிடப்பட்டது. என்றாலும் தவறுள்ள முத்திரைக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது.

தவறுதல்கள் இருமுத்திரைகளின் நடுவில் போடப்படும் துவாரங்கள் விழாததாலும் ஏற்படுவதுண்டு. ஒரு வரிசை துவாரம் விடப்பட்டால் அவ்விடம் இரண்டு முத்திரைகள் ஒட்டினாற்போலிருக்கும். இவ்வித முத்திரைகளுக்கு மதிப்பு அதிகம். இப்படி ஒரு பக்கம் பற்கள் இல்லாதிருக்கும் முத்திரைகளை மிகவும் பரிசீலனை செய்தே வாங்கவேண்டும். சாதாரண முத்திரையையே கூட கத்தரிக்கோலால் வெட்டி ஓரத்தில் பற்கள் இல்லாதபடி செய்து ஏமாற்றலாம்.

இரண்டு மூன்று நிறங்கள் கொண்ட முத்திரைகளை எவ்வளவு கவனமாக அச்சிட்டாலும் சில சமயம் நடுவிலுள்ள படம் எழுத்து பார்டருடனோ (Border) ஒட்டியும் ஒட்டாமலும் அச்சாகிவிடுவது சகஜம். இவைகளை அதிக வித்தியாசமுள்ளதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனாலும் வித்தியாசம் நன்றாகத் தெரியுமாறு மாறுதல் இருந்தால் அவைகளைப் பத்திரப்படுத்துவது நல்லது. எல்லா விபரங்களும் கெட்லாக்குகளில் இருக்கின்றன.

பெரிய சேகரிப்பாளர்கள் இவ்விதமான முத்திரைகளில் எல்லாம் கவனம் செலுத்தி சேகரிக்கின்றனர். மேலும் முத்திரையினுள்ளே தப்பான நீர்க்குறி ஏற்பட்டிருக்கலாம் முத்திரையில் ஏதேனும் இலக்கம் விடுபடலாம். ஆனால் அவைகளை அச்சிடும்போது மிகவும் கவனமாக சிறிய தவறையும் கண்டுபிடித்து நிவர்த்திக்கிறார்கள். என்றாலும் அவர்கள் கண்ணுக்கு மறைந்து ஒன்றிரண்டு தவறான முத்திரைகள் வெளிவந்து அதிக விலைமதிப்பைப் பெற்றுவிடுகின்றன.

வி. ரவிச்சந்திரன்

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பன. அவர்கள் இன்னொசென்ஸ விஷயங்களைக்கூட யோசித்து எப்படி கவனமாகச் செய்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். சான் பிரான்ஸிஸ்கோவில் தங்கியிருந்த நாளும் நானும் என் கணவரும் மறுநாள் காலை லொஸ்ஏஞ்சல்ஸுக்கு புறப்பட்டோம். காலை 7-30 மணிக்கு விமானம். எனவே 5-30 மணிக்கே எழுந்து ஓட்டல் அறையைக் காலிசெய்து கொண்டு விமான நிலையத்திற்கு வந்தோம். அதிகாலையில் எழுந்துவந்துவிட்டதால் எங்களால் கோப்பி சாப்பிட முடியவில்லை. விமானநிலையத்தில் எங்களுக்கு உரிய இடத்தை அடைந்ததுமே அமைவென்று கோப்பி மணம் வீசியது. சுற்றுமுற்றும் பார்த்தால் T. W. A. welcomes to you என்று எழுதியிருந்த ஓரிடத்தில் சிறிய கோப்பிக் கடை இருந்தது. அங்கு மனிதர்கள் இல்லை. இயந்திரம் தான். அதாவது விமானப் பயணிகள் அதிகாலையில் எழுந்துவருவதால் நிச்சயம் கோப்பி சாப்பிடாமல் வருவார்கள். எனவே அவர்களுக்கு சௌகரியம்செய்ய

## யாழ்ப்பாண-

வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கு இலவசமாக கோப்பி வழங்குகிறார்கள். நாம் எத்தனை கப் வேண்டுமானாலும் சாப்பிடலாம். அன்றையதினம் எங்களுக்கு தொண்டைக்கும் குளிரில் அந்த கோப்பியும், அவர்களுடைய ஏற்பாடும் தேவாமிர்தமாக இருந்தன. இப்படி மனித மனத்தின் நுண்ணிய உணர்ச்சிகளைக் கூடப் புரிந்துகொண்டு அவர்கள் செயலாற்றுகிறார்கள் என்று அறிந்து வியந்தேன். இது எனக்கு ஒரு மறக்கமுடியாத அனுபவம். ஆகும்;

கே: நீங்கள் இலங்கைக்கு வந்ததுண்டா?

ப: 1958ம் ஆண்டு குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்திருக்கிறேன். இலங்கை தமிழர்கள் அவர்களது கலாச்சாரங்கள் முதலியன மிகவும் உயர்ந்தவைகள் என்பது எனது கருத்து. அவர்கள் தமிழ்பேசும் பாணியை நான் மிகவும் ரசித்தேன். அதனுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் பேசப்படுவது தமிழே அல்ல என்றுதான் தோன்றுகிறது. இதெல்லாம் பழைய நினைவுகள். மீண்டும் என் கணவருடன் வந்து இலங்கையைச் சுற்றி பார்க்கவேண்டும் என்று விரும்புகிறேன். இது நடந்தால் மிகவும் சந்தோஷப்படுவேன்.

கே: இதுவரை மிகவும் விரிவாக மனந்திறந்து பேட்டியளித்ததற்காக 'ஈழநாடு' வாசகர்கள் சார்பில் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ப: நானும் இலங்கை வாசகர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். [முற்றும்]

## நூல் விமர்சனம்

நூல்: மின்க்கைவற் செய்தி
கௌரவ ஆசிரியர்: க. சி. குலரத்தினம்

மின்க்கைவற் செய்தி முப்பதாவது இதழான இம்மாதச் செய்தி கிடைக்கப்பெற்றோம். கடந்த இதழ்களைப்போலவே இம்மாத இதழும் ஊரவர்களுக்கும், குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் பயன்மிக்க விஷயதானங்களுடன் பொலிந்து திகழ்கிறது. மின்க்கைவற் சமூகத் தொழிலகத்தின் இவ்வெளியீடு சிறந்த ஒரு சேவையாகும்.

சபா

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர, நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

**வெஸ்லி**
(காங்கேசன்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெயசித்ரா
**வெள்ளிக்கிழமை விரதம்**

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
**Subterfuge**
(Action - Thrill)

**REGAL** Daily at 4-45, 7 & 9-30 P.M. only
FREDRICK STAFFORD
in
**From Beirut With Love**
Scope Color Action Thriller

From 4-7-78
KEN CLARK in
**Road To Fort Alamo**
(Scope Color)

**சாந்தி** யாழ். நகர் — போன் 7667
10-30, 2-30, 4-45, 7-00 9-30
NORMAN WISDOM
**ON THE BEAT**
(Full of Comedy) New Print

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி 5 தினங்கள்
முத்துராமன் - சந்திரகலா - ஸ்ரீவித்யா
நடித்த
**காலங்களில் அவள் வசந்தம்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரஞ்சன் + அஞ்சலிதேவி
**நீலமலைத் திருடன்**


# இசைமழை பொழியும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

'மிகச் சிறந்த ஒரு சாகித்தியகர்த்தா இன்று இருக்கிறாரே. அவரின் பாடலொன்றை நீங்கள்கூட இசைத்தட்டில் பாடியிருக்கிறீர்களே' என்று நம்முடைய 'இயலிசை வாரிதி' யாழ்ப்பாணம் என். வீரமணி ஐயர் பற்றிக் குறிப்பிட்டேன்.

'ஆமாம் 'உன்னை நான் காண்பதெப்போ முருகா' என்ற அப்பாடலை 18 ஆண்டுகளுக்கு முன்னர் நான் பாடினேன். அன்று சுட்டிபுரத்தில் கூட அவர் எழுதிய பாடல் ஒன்றை நான் பாடினேன்' என்றார் அப்போது சீர்காழி.

சாஸ்திரீய இசை மேதை தொடர்பான விஷயங்களை நான் அவரிடம் கேட்கவேண்டும் என்று நினைத்திருந்தபோதும் அங்கு அப்போது நிலவிய சூழலில் அது முடியவில்லை.

'இளிமையிலும்கூட காலஞ்சென்ற திரு. ஜி. ராமநாதனையும், கே. வி. மகாதேவன், எம். எஸ். விஸ்வநாதன் போன்ற இசையமைப்பாளர்கள் கருநாடக இசையையே இலகுவாக்கி சில பாடல்களுக்கு இசையமைத்திருக்கிறார்கள்' என்று குறிப்பிட்ட சீர்காழி கோவிந்தராஜன், அவற்றுக்கு சில உதாரணங்களையும் கூறினார்.

ராமநாதனையர் இசையமைத்த தியாகராஜபாகவதர் பாடிய "மன்மதலீலையை வென்றார் உண்டோ..." என்ற பாடல் 'சாருகேசி' ராகத்தைத் தழுவியமைந்திருக்கிறதென்றும்- 'வணங்காமுடி' படத்தில் நான் பாடிய "மலையே உன்நிலை ..." என்றபாடல் "தர்பாரிகானடா" என்றும்- கே. வி. மகாதேவன் இசையமைத்த "அமுதும் தேனும் எதற்கு..." என்ற பாடல் 'மோகன கல்யாணி' என்றும்- தானும் எம். எல். வசந்தகுமாரியும் இணைந்து பாடிய 'விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் '...' என்ற பாடல் 'கல்யாணி' என்றும் அவர் சொன்னார்.

**கதிர்காமப் பாடல்**

'கருவாக வடிவேலன்' திரைப்படத்தில் சீர்காழியின் பாடலொன்றுக்கான படப்பிடிப்பு கதிர்காமத்தில் இடம்பெற்றிருக்கிறது.

'நீயின்றி யாருமில்லை வழிகாட்ட...' என்ற கவிஞர் கதிர்காமக் கந்தன் மீதான இப்பாடலை சீர்காழியுடன் வாணி ஜெயராமும் பாடியிருக்கிறார்.

இப்படத்திற்கான 'பத்து மலைத்திரு முத்துக்குமரனைப் பார்த்துக்களித்திருப்போம்...' என்ற 8 நிமிடப் பாடலை தானும் மற்றும் டி. எம். சௌந்தரராஜன், எம். எஸ். விஸ்வநாதன், பி. சுசீலா, எல். ஆர். ஈஸ்வரி, ரமணியம்மாள், ஆகியோரும் இணைந்து பாடியிருப்பதாகத் தெரிவித்தார் சீர்காழி.

**எம். ஜி. ஆர். பற்றி...**

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் கலைத்துறையிலான திட்டங்கள் பற்றிக் கேட்டதற்கு, 'கண்ணதாசனுக்கு' ஆஸ்தானகவிஞர் கௌரவம், வயதான கலைஞர்களுக்கு மானியம், நாதஸ்வரக் கலைஞர்களுக்கு ..., மதுரையில் இசைக்கல்லூரி இவை எல்லாம் வரவேற்கப்பட வேண்டியன, என்றவரிடம் "புதிய ராகங்களை கண்டுபிடிப்போருக்கு பரிசு" இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்? என்றேன்.

அதை இப்போது விட்டுவிடுவோம்; அதைநான் இப்போது விளக்க முற்பட்டால் அந்த விளக்கம் இப்போதைக்கு முடி

(8-ம் பக்கம் பார்க்க)

# அன்றும் இன்றும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே பழைய ரங்கன்தான்; அன்றைய பழக்க குணம் பூராவும் அதுக. தொட்டதற்கெல்லாம் பியூன் மூர்த்தி மீது எரிந்து விழுவார் மனேஜர் ஸ்ரீரங்கன். இன்று மூர்த்தியின் மகனுக்கு உடம்பு சரியில்லை. ... அலுவலகத்தில் சில பிழைகளை விட்டான். ...

வாசலில் கட்டிக்கொண்டான் மனேஜரிடம். 'அந்த நாள்' நினைவுகளைச் சுமந்த அதே வீதியில் பேசிக் கொண்டிருந்த மூர்த்திக்கு இன்று வந்து நின்றது-ஒரு புதிய "டட்சன்." சாரதி ஆசனத்தில் இருந்து இறங்கிய 'டிப்டாப்' ஆசாமி ஒருவர் மூர்த்தியை நெருங்கினார்.

'உங்க பேர்?' அவர் கேள்விக்கு உதடு மூர்த்தி ... பதில் சொன்னான்.

'அடடே...அதானே பார்த்தேன்... நீங்க மூர்த்தியா... ஏண்டா இவ்வளவு இளைச்சிட்டே'

'நீங்க...'

'என்னடா மறந்திட்டியா நீங்க'... முன்பு போல் 'டேய் குமார்' என்றே கூப்பிடேன்'

●

குமார் வீடு...மூர்த்தியைப் பற்றிக் குமாரும் குமாரைப் பற்றிய செய்திகளை மூர்த்தியும் தெரிந்துகொண்டனர். குமார் இப்போ ஒரு 'ஆர்க்கிடெக்ட்.'

'மூர்த்தி ஒண்ணுக்கும் யோசியாதே. இருக்கிறவங்க இல்லாதவங்களுக்கு உதவத்தானே இருக்கிறம். இனிமேல்...என்ன உதவி வேணுமெண்டாலும் தயங்காமல் வந்து என்னிடம் கேள்' என்று சொன்னதுமட்டுமல்லாமல் 'இவன் என் பிரண்ட்' என்று மூர்த்தியை அறிமுகப்படுத்தினான் தன் மனைவிக்கு.

●

மனைவியிடம் அன்றிரவு, நடந்து முடிந்த கதையையும் சொன்னான் மூர்த்தி. "நல்லவேளை முடிச்சலேயே. நான் இன்னை வரையில் யாரிடம் அடிவாங்கினேனோ அவன் அவமானத்தினான். யாருக்காக அடிவாங்கினேனோ அவன் என்னைத் தன் பால்ய நண்பன் என்று சொல்லவே வெட்கப்படுகிறான்.'

(யாவும் கற்பனை)


**நாகம்மாள்**
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
முத்துராமன்—சுஜாதா
நடித்த
**முத்தான முத்தல்லவோ**

**ராணி** (யாழ்.நகர்)
**50-வது வெற்றித் திருநாள்**
தினசரி 4 காட்சிகள்
தமிழ்த் திரைப்பட வரலாற்றின் மாபெரும் சாதனை.
167 தொடர்ந்த நிறைந்த காட்சிகளையும், மொத்த வசூலாக
3,50,000-00யும் தாண்டி வீறு நடை போடுகிறான்
நானே நானே என்றிருந்தேன் நல்ல நேரம் பார்த்து வந்தேன்
தத்தித் தத்தி ஓடி வந்தேன் அதை இங்கே கண்டேன்



**உத்தமன்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - சுஜாதா • சோ
சௌகார் ஜானகி - சுந்தரராஜன்
நடித்த
**பேரும் புகழும்**

**ராஜா** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - ரஜனி - ஆலம்
சுதா - Y. விஜயா நடித்த
**மன்மத லீலை**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்—ராஜசுலோசனா
**ராஜமகுடம்**

**லிடோ** போன் 7698
சிவகுமார், அம்பிகா
(யாழ். நகர்)
**மதனமாளிகை**

